# சேவை இன்றும் அதிகரிப்பு

இன்றும் மெட்ரோ ரயில் சேவை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. காலை, 7:00 மணிமுதல், 11:00 மணி வரை, மாலை, 4:00 மணிமுதல், 8:00 மணிவரை, 5 நிமிடத்திற்கு ஒரு ரயிலும், மற்ற நேரங்களில், 10 நிமிடத்திற்கு ஒரு ரயிலும் இயக்கப்பட உள்ளன.

வண்ணாரப்பேட்டை வழித்தடத்தில், இதற்கு முன், 65 ஆயிரம் பயணியர் தினசரி பயணித்த நிலையில், விம்கோ நகர் வரை, சேவை நீட்டிக்கப்பட்டு, ரயில் கட்டணம் குறைக்கப்பட்டதால், இந்த தடத்தில், 96 ஆயிரம் பேர் வரை பயணிப்பதாக, மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகள் கூறினர்.